**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/s. P. VENKATA REDDY ROUGH STONE QUARRY LEASE OVER AN EXTENT OF 2.38.5 HA (PATTA LAND) LOCATED AT S.F.NO. 1267/2, 1268/2, 1268/3 KAMMANDODDI VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 02.05.2023 AT 11.30 AM AT M/S. MANI MAHAL, UDDANAPALLI ROAD, NEAR POLICE STATION, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT. Pincode – 635 117.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Tmt. R. Saranya, I.A.S., | : | Sub Collector, Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 3 | Er. T.Senthilkumar | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 4 | Er. S.Neelamagam | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 5 | Er.K.Ganesan | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur,<br>Krishnagiri District |
| 6 | Thiru. P. Venkata Reddy | : | The Proponents<br>M/s. P. Venkata Reddy Rough Stone Quarry |
| 7 | Thiru.R.Rajendran | : | EIA Consultant,<br>M/s. Ecotech Labs Pvt Ltd, Chennai |
| | Public | : | 45 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed M/s. P. Venkata Reddy Rough Stone Quarry Lease over an Extent of 2.38.5 Ha (Patta land) Located at S.F.No. 1267/2, 1268/2, 1268/3, Kammandoddi Village, Shoolagiri Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 31.03.2023 and bit notices regarding public hearing was issued to the public of Kamandoddi Village, Kukkanapalli Village, Pannapalli Village, Thirumalakotta Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector, Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector, Hosur has requested the project proponent to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.R.Rajandran, EIA Consultant, M/s. Ecotech Labs Pvt Ltd of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express

5

their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Nagabooshanam, Kukkalapalli Village:**

Thiru. Nagabooshanam has greeted his good morning to all attendees of the public hearing of the proposed rough stone quarry. He mentioned that, the management of the proposed quarry has already running two quarries and he asked the quarry management should give priority in the employment opportunities of the proposed quarry project to the locals. Moreover, two smart classrooms have been set up in the government school located in Pathakotta village by the management of the proposed quarry. Further, he asked the quarry management for renovation of the infrastructure of the government school located in the village of Tirumalakota where the proponent of the proposed quarry management studied. Finally, he asked the quarry management to plant twice as many saplings mentioned in the power point presentation to protect the environment and to operate the quarry as per the norms and guidelines laid down by the Tamil Nadu Pollution Control Board by properly using water sprinklers to control the dust emanation and air pollution.

**2. Thiru. Selvam, Attakuruki Village:**

Thiru. Selvam has said that, after the operation of the proposed quarry, it would be beneficial for us by releasing the used water in the quarry for agricultural utilization. He also said that, the local people of Attakurukki, Kukkalapalli and Kamandoddi villages located around the quarry should be given priority in the proposed quarry employment opportunities like driver and other jobs.

**The Sub Collector, Hosur:**

The Sub Collector, Hosur has asked to explain the closure procedure of the quarry.

**Reply:**

Environmental Impact Assessment Consultant of the proposed quarry management, Mr. R.Rajendran, M/s. Eco Tech Labs Pvt. Ltd., Chennai has briefed that, after the operation of the proposed quarry, an iron barbed wire fence will be erected around the quarry to prevent the entry of humans and animals and we will implement a rainwater harvesting project in the ditch of the abandoned quarry.

**The District Environmental Engineer, TNPCB, Hosur:**

The District Environmental Engineer, TNPCB, Hosur has asked to explain the utilization of the top soil to be taken out during the mining.

**Reply:**

Environmental Impact Assessment Consultant of the proposed quarry management, Mr. R. Rajendran, M/s. Eco Tech Labs Pvt Ltd, Chennai has briefed that, the top soil taken from the quarry is being used as surface medium to growing of saplings which will create the green belt around the quarry and the gravels found in the remaining top soil will be sold.

**3. Thiru. Periyasamy, Kamandoddi Village:**

Thiru. Periyasamy has said that, the proposed quarry management should provide employment opportunities of the proposed quarry to the locals.

**4. Thiru. Mohankumar, Pillaikothur Village:**

Thiru. Mohankumar has asked for help in improving the infrastructural facilities of the government upgraded hospital located at Kamandoddi village. He also requested that the link road connecting the main road from the quarry should be constructed as a mud road and to proper use of water sprinklers on the mud road to control the dust emanation.

**The Proponent, M/s. P. Venkata Reddy Rough Stone Quarry:**

The Proponent, M/s. P. Venkata Reddy Rough Stone Quarry has promised to

help in the infrastructure development of the local government upgraded hospital.

**5. Thiru. A.Vijay , Kamandoddi village:**

Thiru. A. Vijay has asked to establish a library in the local school and to provide more story books in the library so that the children can utilize it.

**Village President, Kamandoddi village:**

Village President, Kamandoddi village has said that, the library construction work has already been completed and the Minister has to inaugurate it. Further, he asked the quarry management to help in erecting a perimeter wall at local government school.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 6 number of petitions were received on the proposed M/s. P.Venkata Reddy Rough Stone Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

08/5/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

**Sub Collector**
**Hosur**
5/7

**District Collector**
**Krishnagiri**
5/7

**திரு/ள். பி.வெங்கடரெட்டி ரப் ஸ்டோன் குவாரி, சர்வே. எண்.1267/2, 1268/2 & 1268/3, காமன்தொட்டி கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 2.38.5 ஹெக்டர் (பட்டா நிலம்) பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 02.05.2023 அன்று உத்தனப்பள்ளி ரோடு, காவல் நிலையம் அருகில், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள திரு/ள். மணி மஹால், முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.R. சரண்யா, I.A.S., | : | சார் ஆட்சியர், ஓசூர்,<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்.<br>ஓசூர். |
| 3 | Er.T.செந்தில் குமார் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | Er.S.நீலமேகம் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 5 | Er.K.கணேசன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு.P.வெங்கடரெட்டி | : | உரிமையாளர்<br>திரு/ள். பி.வெங்கடரெட்டி ரப் ஸ்டோன் குவாரி. |
| 5 | திரு. R. ராஜேந்திரன் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>திரு/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 45 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு. பி.வெங்கடரெட்டி ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், ஓசூர், பொதுமக்கள் மற்றும் திரு. பி.வெங்கடரெட்டி ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 31.03.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், காமன்தொட்டி, குக்கனப்பள்ளி, பன்னப்பள்ளி, திருமலாகோட்டா ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் திரு. பி.வெங்கடரெட்டி ரப் ஸ்டோன் குவாரி

திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். பி.வெங்கடரெட்டி ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. R. ராஜேந்திரன், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு. நாகபூஷணம், குக்கலப்பள்ளி கிராமம்:**

திரு. நாகபூஷணம் அவர்கள், உத்தேசிக்கப்பட்ட குவாரியின் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவருக்கும் தனது காலை வணக்கத்தை தெரிவித்தார். உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரி நிர்வாகத்தினர் ஏற்கனவே, இரண்டு குவாரிகளை நடத்திவருவதாகவும் தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியில் உள்ள வேலைவாய்ப்புகளில் உள்ளூர் மக்களுக்கே அதிகளவு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கூறினார். மேலும்,

பத்தகோட்டா கிராமத்தில் அமைந்துள்ள அரசு பள்ளியில் இரண்டு ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைத்து தந்துள்ளனர் எனவும், மேற்கொண்டு இக்குவாரியின் குத்தகையாளர் பயின்ற திருமலா கோட்டா கிராமத்தில் அமைந்துள்ள அரசு பள்ளியின் உட்கட்டமைப்பு வசதிகளை புதுப்பித்து தருமாறு கேட்டுக்கொண்டார். இறுதியாக குவாரி நிர்வாகத்தினர் கூறியதை விட, இரண்டு மடங்கு மரக்கன்றுகளை நட்டு சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வகுத்துள்ள விதிகளின்படி முறையாக நீர்தெளிப்பான்களை பயன்படுத்தி தூசி எழும்பா வண்ணம் காற்று மாசினை கட்டுப்படுத்தி குவாரியை இயக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**2. திரு. செல்வம், அட்டகுறுக்கி கிராமம்:**

திரு. செல்வம் அவர்கள், உத்தேசிக்கப்பட்ட குவாரி செயல்பாட்டிற்கு பிறகு பயன்படுத்திய நீரினை விவசாய பயன்பாட்டிற்கு வழங்கினால் ஏதுவாக அமையும் என்று தெரிவித்தார். மேலும், குவாரியில் உள்ள ஓட்டுநர் உள்ளிட்ட வேலைவாய்ப்புகளில் குவாரியை சுற்றியுள்ள அட்டகுறுக்கி, குக்கலப்பள்ளி, காமன்தொட்டி ஆகிய உள்ளூர் மக்களுக்கே அதிகளவு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கூறினார்.

**சார் ஆட்சியர், ஒசூர் :**

சார் ஆட்சியர், ஒசூர் அவர்கள் குவாரியை மூடும் செயல்பாட்டு முறையினை விளக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**பதில்:**

நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. R. ராஜேந்திரன், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் குவாரி செயல்பாட்டிற்கு பிறகு குவாரியை சுற்றிலும் மனிதர்கள் மற்றும் விலங்குகள் அண்டாதவாறு இரும்பு முட்கம்பி வேலியானது அமைக்கப்படும் என்றும் கைவிடப்பட்ட

குவாரியின் பள்ளத்தில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தினை செயல்படுத்துவோம் என்றும் குவாரியின் மற்ற செயல்பாட்டு இடங்களில் மியாவாகி முறையில் மரங்கள் நடப்பட்டு பாரமரிக்கப்படும் என்று கூறினார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர்**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர் அவர்கள் குவாரியின் மேற்பரப்பு மண்ணை எவ்விதம் பயன்படுத்துவது என்ற முறையினை விளக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**பதில்:**

நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. R. ராஜேந்திரன், தி/எ்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் குவாரியிலிருந்து எடுக்கப்படும் மேற்பரப்பு மண்ணானது குவாரியை சுற்றிலும் பசுமை வளாகத்தினை உருவாக்க பயன்படுத்தப்படும் மரங்கன்றுகளை நடுவதற்கும், மீதமுள்ள மேற்பரப்பு மண்ணில் காணப்படும் சிறுசிறு கற்களானது விற்பனைக்கும் வழங்கப்படுகிறது என்று தெரிவித்தார்.

**3. திரு. பெரியசாமி, காமன்தொட்டி கிராமம்:**

திரு. பெரியசாமி அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியில் உள்ள வேலைவாய்ப்புகளில் உள்ளூர் மக்களுக்கே வேலைவாய்ப்பினை அளிக்க வேண்டும் என்று கூறினார்.

**4. திரு. மோகன்குமார், பிள்ளைகொத்தூர் கிராமம்:**

திரு. மோகன்குமார் அவர்கள், காமன்தொட்டி கிராமத்தில் அமைந்துள்ள அரசு மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையின் உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவதற்கு உதவிடுமாறு கேட்டுக்கொண்டார். மேலும், குவாரியிலிருந்து முதன்மை சாலையை இணைக்கும் இணைப்பு சாலையை மண் சாலையாக

அமைத்து தண்ணீர் தெளிப்பான்களை முறையாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

**உரிமையாளர், தி/ள். பி.வெங்கடரெட்டி ரப் ஸ்டோன் குவாரி**

தி/ள். பி.வெங்கடரெட்டி ரப் ஸ்டோன் குவாரி நிர்வாகத்தின் உரிமையாளர் அவர்கள், அரசு மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையின் உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவதற்கு உதவுவோம் என்று உறுதியளித்தார்.

**5. திரு. A. விஜய், காமன்தொட்டி கிராமம்:**

திரு. A. விஜய் அவர்கள், உள்ளூரில் அமைந்துள்ள பள்ளியில் நூலகம் ஏற்படுத்தி தருமாறும் அந்நூலகத்தில் குழந்தைகளுக்கு பயன்படும் வகையில் கதை புத்தகங்கள் அதிகளவில் வழங்கிடுமாறு கேட்டுக்கொண்டார்.

**காமன்தொட்டி கிராம ஊராட்சி தலைவர்:**

காமன்தொட்டி கிராம ஊராட்சி தலைவர் அவர்கள், ஏற்கனவே, நூலகமானது கட்டி முடிக்கப்பட்டு, அமைச்சர் அவர்களால் திறப்பு விழா நடத்தி துவங்கப்பட உள்ளதாக தெரிவித்தார். மேலும், உள்ளூரில் அமைந்துள்ள அரசு பள்ளியில் சுற்றுச்சுவர் அமைக்க குவாரி நிர்வாகத்தினர் உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

15

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். பி.வெங்கடரெட்டி ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 6 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். பி.வெங்கடரெட்டி ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

08/5/2023

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**ஓசூர்**

8/5/23

**சார் ஆட்சியர்**
**ஓசூர்**

4/7

**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி**

4/7